**சார்பு நீதிமன்றம், குளித்தலை**
OS.No.153/2016

பெயர்: கோபால் பி.வா.சா.1 தேதி **30.03.2026**

**ஐந்தாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

என்னிடம் காண்பிக்கப்படும் காவல் துறையில் கொடுத்தாக ரசீதில் எதிர்மனுதாரர் சொத்தை பிரித்து கேட்டு மனுதாரரை தகாத வரர்த்தைகளால் திட்டுவதாக புகார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எதிர்மனுதாரர் என்பவர் மருதை என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் மனுதாரர் பாப்பம்மாள் எனது தாயார். மேற்படி புகார் ரசீதானது கோட்டை காவல் நிலைத்தில் 15.10.2013 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பாபபஅம்மள் என கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மனு ரசீதுடன் பாப்பம்மாள் என்பவர் கொடுத்த புகார் மனு ஏதுவும் இணைக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி புகார் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் மேற்படி சொத்துக்கள் அனைத்து பாகப்பிரிக்கபடதா பொது சொத்து என்கிற சங்கதி தெரிந்து விடும் என்பதற்காக மேற்படி புகாரினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு ரசீதில் சொத்தை பிரித்து கேட்டு 5ம் பிரதிவாதி கேட்டு உள்ளார் என்றும் நான் தாக்கல் ஆவணத்தின் வாயிலாகவே தெளிவாக தெரிகிறது என்றால் சரியல்ல. மேற்படி நான் தாக்கல் செய்த உயில் ஆவணவங்கள் அனைத்திலும் பாபபஅம்மள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது இருந்தே மேற்படி உயில் ஆவணங்கள் அனைத்து மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் புகார் மனு ரசீதில் பாப்பஅம்மள் என்றும் உள்ளதை வைத்து பார்க்கும் போது மோசடியாக உயில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என தெரியவருகிறது என்றால் சரியல்ல. 12.02.1974-ம் தேதியிட்ட மாரியப்ப செட்டியார் வகையறா செய்து கொண்ட பாகப்பத்திரப்படி மேற்படி மாரியப்ப செட்டியார் எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். 12.02.1974-ம் தேதியிட்ட மாரியப்ப செட்டியார் வகையறா செய்து கொண்டதாக கூறக்கூடிய பாகப்பத்திரத்தின் சொத்து விவரங்கள் குறித்த அனைத்து விவரங்களும் எனக்கு தெரியுமா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 240 சதுரடி பழைய வீடு காண்பிக்கப்பட்டுள்ளது. ஒரு காடும் வீடும் உள்ளது. 06.07.2024 தேதியிட்ட CC 208/2011 தீர்ப்பில் இரண்டாவது பக்கத்தில் கடைசி வாரியில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் 22.04.2011 எனது தாயார் எனக்கு கொடுக்க வேண்டிய பணம் 2,50,000/-த்தை தான் வீட்டில் வந்து வாங்கி கொள்ள சொன்னார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எனது தாயார் பாப்பம்மாள் வாழ்வதாரத்திற்காகவே கஷ்டப்பட்டு வந்த நிலையில் வீடு குடித்தனம் செய்து வந்த நிலையில் இருந்துள்ளார் என்பது மேற்படி சங்கதி மூலம் தெரியவருகிறது என்றால்

சரியல்ல. 12.07.2010 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் எனது தாயார் சொத்தினை இடையூறு செய்யகூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.166/2010 வழக்கின் நான்கு, ஐந்தாவது, ஆறாவது பத்தியில் சில உயில்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயில்களை பற்றி இவ்வழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் தெரிவித்துள்ளேன். மேலே சொன்ன அ.வ.எண்.166/2010 வழக்கின் நான்கு, ஐந்தாவது, ஆறாவது பத்தியில் சில உயில்கள் பற்றி இவ்வழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்கிறேன் என்றாலும் ஏற்கெனவே எடுக்கப்பட்ட சாட்சிங்களை பூர்த்தி செய்வதற்காக இந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கிற்கு தேவையான உயில் ஆவணங்களை மறைத்துவிட்டு எனது தாயாரின் கையெழுத்தினை மோசடியாக பயன்படுத்தி சொத்தை அபகாரிக்க வேண்டும் நோக்கத்தில் போலியாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இவ்வழக்கின் வாதியானவர் 12.02.1974-தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் என்னால் சரியாக சொல்ல இயலாது. 12.02.1974-தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை பற்றி தெரியுமா என்றால் சரியாக தெரியாது. 12.02.1974-தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை ஏற்கெனவே தாக்கல் செய்த விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 12.02.1974-தேதியிட்ட பத்திரத்தை என்ன காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்ற காரணத்தை கூறவில்லை என்றால் சரியல்ல. 15.10.2013 தேதியிட்ட ஆவணத்தில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். 15.10.2013 தேதியிட்ட புகார் மனு ரசீது, மற்றும் அ.வ.எண்.166/2010 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் வாதியோ நானோ தரப்பினர் இல்லை என்றால் சரிதான். CC 208/2011 வழக்கில் வழக்கிற்கும் வாதிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சிவில் மற்றும் கிரிமினல் வழக்கும் அனைத்தும் சொத்து சம்பந்தமாக பாகப்பிரிவினை கேட்டு ஏற்பட்ட பிரச்சனையின் பெயரில் உண்டான வழக்கு என்றால் சரிதான். எனது தாயார் இதே நீதிமன்றத்தில் எனது சகோதரி வாதியின் மீது வழக்கு தாக்கல் செய்ந்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது தாயாரருக்கு விரோதமானது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பினை எதிர்த்து கரூர் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டு பின்னர் எனது தாயர் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து இருந்தார் என்றால் மதுரை உயர்நீதிமன்றத்தில்

நான் தான் மேல்முறையீடு தாக்கல் செய்திருந்தேன். மேற்படி மேல்முறையீட்டை நாங்கள் வாபஸ் பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான் சொத்தில் பாதி தருவதாக சொன்னது அடிப்படையில் மேற்படி மேல்முறையீட்டை வாபஸ் பெற்றோம். (சாட்சி தற்பொழுது சுமூகமாக பேசி முடித்துக்கொள்வதாக கூறியதன் அடிப்படையில் வாபஸ் பெற்றுகொண்டதாக கூறுகிறார்). சொத்தில் பாதி தருவதாக சொன்னததன் அடிப்படையில் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டதாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்து சம்பந்தமாக வழக்கில் கூறாத வேறு உயில் ஆவணங்கள் உண்டா என்றால் சரியல்ல. நான் எனது சுயலாபத்திற்காக சொத்துக்கள் அனைத்தையும் மோசடியாக அடைய வேண்டும் என்பதற்காக எனது தாயாரின் வயோதிகத்தையும் படிப்பறிவின்மையையும் தவறாக பயன்படுத்தி மோசடியாக உயில்கள் போன்ற ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டு வாதிக்கும் ஐந்தவாது பிரதிவாதி சொத்து கொடுக்க கூடாது என்பதற்காக பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதியின் பங்குஉரிமயை பாதிக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் வழக்குரையிலும் தற்சமயம் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது கட்சியை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களாக கருத இயலாது என்றால் சரியல்ல. சில ஆவணங்கள் நான் தரப்பினாராக இல்லாத நிலையில் மேற்படி ஆவணங்களை எனக்கு சாதகமான ஆவணங்களாக கருத இயலாது என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN Digitally signed by MUTHUSAMY ESWARAN

சார்பு நீதிபதி
குளித்தலை.